சுருக்கம்

திட்டங்கள் – பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியம், வலசத்துறை – அத்தியூத்து சாலை (கி.மீ 0/0–6/0) நீளத்தில் அமைப்பதற்கு வனத்துறைக்கு செலுத்த வேண்டிய தொகையான ரூ.9,29,520/– ஒப்பளிப்பு செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அதி.2) துறை

அரசாணை (நிலை) எண். 114

நாள்: 21.11.2012.

படிக்கப்பட்டவை:

1. மாண்புமிகு நிதியமைச்சரின் கடிதம் நாள் 7.5.2012.
2. மாவட்ட ஆட்சித் தலைவர்/பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தேனி, ந.க.எண்.1442/2003/டி5, நாள் 18.11.2011.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.33431/12 டியு4, நாள் 11.5.2012.

******

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் மாண்புமிகு அமைச்சர் (நிதி) அவர்கள், தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியம், வலசத்துறை–அத்தியூத்து சாலையை அமைப்பதற்கு மத்திய அரசின் சுற்றுச் சூழல் அமைச்சகத்திடமிருந்து stage-I ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்றும், இதில் வனத்துறை வழியாகச் செல்லும் சாலைக்காக வனத்துறைக்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.9,29,520/– செலுத்தவும், பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் இப்பணியை மேற்கொள்ள அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு கேட்டு தேனி மாவட்ட ஆட்சித் தலைவரும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து, வலசத்துறை–அத்தியூத்து சாலை அமைப்பதற்கு ஆவண செய்யுமாறு, மாண்புமிகு அமைச்சர் (ந.நி(ம)ஊவ) அவர்களை வேண்டியுள்ளார்.

2. மேற்கண்ட வலசத்துறை–அத்தியூத்து சாலை அமைப்பதால் சாலை அமைக்கும் மலைப்பகுதியில் சுமார் 1000 ஏக்கரில் காப்பி, மிளகு, மலைவாழை, பலா, இலவம்பஞ்சு, எலுமிச்சை போன்ற பல்வேறு பயிர்கள் விவசாயம் செய்யும் சுமார் 1500 மக்கள் தொகைக்கு இச்சாலை மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று மேலே 2ல் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

(த.பி.பா)

3. மேற்காணும் பொருள் தொடர்பாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரிடம் அறிக்கை கோரப்பட்டதின் தொடர்ச்சியாக, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்கள் மேலே 3–ல் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், வலசத்துறை–அத்தியூத்து சாலை அமைப்பதற்கு மத்திய அரசின் சுற்று சூழல் அமைச்சகத்திடமிருந்து stage-I ஒப்புதல் கிடைத்துவிட்டதால் வனத்துறைக்கு stage-II ஒப்புதல் பெற வேண்டி மாநில அரசின் சிறப்பு நிதியாக கீழே குறிப்பிட்டுள்ள தொகையை அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

| வ. எண். | சாலை விவரம் | காடு வளர்ப்பு ஈட்டுத் தொகை ரூ. | நிகர மதிப்பீட்டுத் தொகை ரூ. | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | வலசத்துறை–அத்தியூத்து சாலை (கி.மீ 0/0 – 6/0) | 2,91,000 | 6,38,520 | 9,29,520 |

மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்கள் தனது கடிதத்தில் மத்திய அரசின் சுற்று சூழல் அமைச்சகத்திடமிருந்து stage-II ஒப்புதல் கிடைக்கப் பெற்றவுடன் பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் புதிய இணைப்புச் சாலைகள் அமைக்க கருத்துரு மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்திற்கு அனுப்பப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் செயற்குறிப்பினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்றுக் கொள்ளலாம் என்று முடிவு செய்து, தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியம், வலசத்துறை–அத்தியூத்து சாலையை கி.மீ 0/0–6/0 நீளத்தில் பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் அமைப்பதற்கு வனத்துறைக்கு செலுத்த வேண்டிய தொகையான ரூ.9,29,520/–க்கு ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்கு தலைப்பில் பற்று வைக்கப்படும்.

> 2515–00–ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் – 104 மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிருவாகம் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம் – JA பிரதம மந்திரி கிராம சதக் யோஜ்னா திட்டத்தின் கீழ் புதிய சாலைகள் அமைத்தல் –09 உதவித் தொகை–03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (த.தொ.கு. 2515 00 104 JA 0934)

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கூடுதல் நிதியொதுக்கம் வரும் 2012–2013–ஆம் ஆண்டிற்கான திருத்திய / இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் வழங்கப்படும். அவ்வாறு வழங்குவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகிறது. இதுகுறித்து சட்டப்பேரவையின் கவனத்திற்கு கொண்டுவரும் பொருட்டு, இவ்வாண்டின் துணை மதிப்பீட்டில் (supplementary Estimates) குறிப்பிட்டு சேர்த்திடல் வேண்டும். 2012–2013–ஆம் ஆண்டிற்கான கருத்துருவை நிதித்துறைக்கு அனுப்பிடும் பொழுது மேற்காணும் செலவினத்தையும் தவறாமல் சேர்த்து அனுப்பிடுமாறும், மேலும் இச்செலவினத்தை துணை மதிப்பீட்டில் சேர்த்திடும் பொருட்டு தேவையான விளக்கக் குறிப்பினையும் நிதி (வரவு செலவு பொது–1) துறைக்கும் அனுப்புமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண். 61039A/RD/2012 நாள் 16.11.2012–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 1589 (ஆயிரத்து ஐநூற்று எண்பத்தொன்பது)

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச. பழனியப்பன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை – 15.
மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி.
திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தேனி.
மாநில கணக்காயர், சென்னை – 6/18/35,

<u>நகல்</u>

மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நிதி (ஊ.வ) (வ.செ.பொது.I/II) துறை, சென்னை – 9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.